முருகப்பெருமான் துணை

# மகான் இயற்பகை நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**21.11.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. காப்பாக மக்களுக்கு வரம்
கருணைபட தந்து அருளும்
சுப்பனின் அவதார குருவே
சூட்சும ஞானியே அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் பிலவ தேளின் திங்கள்
வரங்களென பஞ்சதிகதி கதிர்வாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 05ம் நாள், 21.11.2021 ஞாயிற்றுக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை இயற்பகை நாயனாரும்
அருளுவேன் உலகநலம் காண
வாசிவென்ற ஞானவான்களும்
வரம்தந்து அரங்கனுடன் இருக்க
4. இருக்கவே அரங்கன் வாழும்
இணையில்லா பிரணவக் குடிலில்
கருத்தாக மகா சக்திகளும்
கருணை கொண்டு அருளிவர
5. வருகின்ற காலமதில் உலகமக்கள்
வணங்கி அரங்கன் குடிலில்
தருகின்ற அருளமுதை உண்டு
தவமாக தீட்சை பெற்று வணங்கி
6. வணங்கித் தொடர்ந்து வந்து
வையகத்தில் ஞானிகள் பூசை
இணங்கியே நித்தம் செய்துவர
ஏற்றுமே அரங்கன் அருளும்
7. அருளும் அன்னதான நெறியை
அனைவரும் பின்பற்றிச் செய்துவர
அருளும் பொருளும் அதிவளமும்
அரங்கன் அருளால் அடைவர்
8. அடையவே ஞானிகள் தயவும்
அருளாசி மக்கள் ஏற்றுவர
தடைகள் யாவும் வென்று
தன தேட்டு வளமும் கூடி
9. கூடியே உலகோர் இடரில்லா
குருவரங்கன் தயவால் தேறுவர்
தேடியே அறிவு தெளிவு திடம்
தெய்வபலமும் கூடி இனிதே

10. இனிதே அரங்கன் தேடலில்
எல்லோரும் ஞானிகள் ஆவர்
கனிவுடன் சுத்தநெறி வழி
கருணைமிகுந்த மக்களாகி

11. ஆகியே கலியுக மக்களெல்லாம்
ஆறுமுகன் அருளாசி பெற்று
அகிலத்தில் ஞானத்தலைமை கண்டு
அறிவிப்பேன் ஞான ஆட்சி அடைவர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–